**தலைப்பு 289 – ஏற்றுமதி விவசாயத் திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2021 மே 21 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 மே 21 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- கணக்காய்விற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்பிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் இல்லையாயினும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாடு தொடர்பான புரிதலை பெற்றுக்கொண்டேன்.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடு கணக்கீட்டு மதிப்பீடுகள் நியாயமான மற்றும் முகாமைத்துவம் மூலம் செய்யப்பட்ட வெளிப்படுத்தல்கள் பாராட்டப்பட்டது.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமானதாகவும் உட்சேர்க்கப்பட்டுள்ளது என்றும் மற்றும் வெளிப்படுத்தல்கள் அடங்கிய நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த முன்வைப்பும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்கள் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்களுடன் இணங்குவதாகவும்

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்காமை

அரச கணக்குகள் திணைக்களத்தால் வழங்கப்பட்ட வழிகாட்டல் இலக்கம் 06 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதும் அத்தேவைப்பாடுகளிலிருந்து விலகிய சந்தர்ப்பமொன்று கீழே காட்டப்பட்டுள்ளது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நடைமுறைக் கணக்கொன்றில் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் ரூபா 111,277 பெறுமதியான வழங்கப்பட்ட போதும் கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்படாத 11 காசோலைகள் காணப்பட்ட போதும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட குறிப்பு viii இல் அதாவது வங்கிக் கணக்கு தொடர்பான நிலைபர அறிக்கையில் அத்தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் புதிய வங்கிக் கணக்கு தொடர்பான நிலைபர அறிக்கையில் உள்ளடக்கப்படவில்லையென | ஒவ்வொரு படிவத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய தகவல்கள் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

## 1.6.2 நிதி நிலைமை தொடர்பான கூற்று

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதி நிலைமை தொடர்பான கூற்றில் ACA - P படிவத்தில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி ரூபா 1,098,889,538 ஆக இருந்த போதும் SA-82 கணனி அச்சு அறிக்கையின் பிரகாரம் அப்பெறுமதி ரூபா 1,093,110,764 தொகையும் ACA 6 நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றில் அது ரூபா 1,259,396,760 ஆக இருந்தது. அதன் பிரகாரம் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் குறித்த பதிவேடுகளுடன் பொருந்தவில்லை. | சீராக்குவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக | வேறுபாடுகளுக்குரிய காரணங்கள் இனங்காணப்பட்டு கணக்குகளில் தேவையான சீராக்கம் செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட ACA - 6 நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றில் உள்ளடக்கப்பட்ட 10 சொத்து உருப்படிகளின் பெறுமதி மற்றும் SA-82 திறைசேரி கணனி அச்சுப்பிரதியில் குறிப்பிடப்பட்ட பெறுமதிக்கு இடையே ரூபா 9,477,195 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | திணைக்களத்தினால் நடாத்திச் செல்லப்படும் கையளிப்பு செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள 14 அரசின் விடுதிகள் காணப்பட்ட போதும் ACA - 6 நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றின் கீழ் அரச வீடுகளின் எந்தவொரு பெறுமதியும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஈ) | நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட ACA 6 நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றில் ஆரம்ப மீதி முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றில் உள்ளடக்கப்பட்ட இறுதி பெறுமதி மற்றும் கணனி அச்சுப்பதிவு SA 80 நிதியல்லாத சொத்துக்கள் பொழிப்பில் குறிப்பிடப்பட்ட பெறுமதிக்கு இடையே ரூபா 5,778,777 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது. | - மேற்படி - | நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட மீதி உரிய பதிவேடுகளுடன் ஒப்பிடப்பட வேண்டும். |

1.6.3 வைப்புக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிதிக்கூற்றுக்களில் வைப்புக் கணக்கு தொடர்பான கூற்றில் உள்ளடக்கப்பட்ட நியதிச்சட்டக் கொடுப்பனவுகளுக்காக தற்காலிக நிறுத்திவைத்தல் வைப்புக்கள் ஆண்டில் செலவு வைத்தல் ரூபா 569,219 ஆக இருந்ததுடன் திறைசேரி கணனி அச்சிடல் குறிப்பிடன் பிரகாரம் ரூபா 574,837 ஆக இருந்தமையால் ரூபா 5,618 ஆன வேறுபாடு இருந்தது. அவ்வாறே அக்கணக்கில் ஆண்டினுள் வரவு வைத்தல்கள் ரூபா 611,186 ஆக இருந்ததுடன் திறைசேரி கணனி அச்சிடல் குறிப்பின் பிரகாரம் அது ரூபா 616,803 ஆக இருந்தமையால் வரவு வைத்தல்களில் ரூபா 5,617 வேறுபாடொன்று காணப்பட்டது. | 2021 ஆம் ஆண்டின் போது சீராக்குவதற்காக நடவடிக்கை எடுப்பதாக. | வேறுபாடுகள் இனங்காணப்பட்டு கணக்குகளில் தேவையான சீராக்கம் செய்யப்பட வேண்டும் |

2. நிதி மீளாய்வு

2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிற்காக திணைக்களத்திற்கு ரூபா 1,374,800,000 ஆன பாதீட்டு நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் ரூபா 1,264,154,000 தொகை மாத்திரம் கிடைத்திருந்தது. ஆதலால் செலவின விடய இலக்கம் 289-2-1-2202 இன் கீழ் அபிவிருத்தி உதவிகளாக கருத்திற் கொள்ளப்பட்டிடிருந்த ரூபா 600,000,000 ஆன நிதி ஏற்பாட்டில் ரூபா 529,161,029 மாத்திரம் செலவிடப்பட்டிருந்ததுடன் கட்டுநிதி கிடைக்காமையால் அந்நிதி ஏற்பாட்டில் ரூபா 70,838,971 தொகை சேமிக்கப்பட்டிருந்தது. | அவதானிப்பை ஏற்றுக்கொள்வதாக | அங்கீகரிக்கப்பட்ட கட்டுநிதிகளிலிருந்து ஆகக்கூடிய பயனைப் பெற்று திட்டமிடப்பட்ட செயற்பாடுகளை பூரணப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.2. செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தாபன விதிக்கோவையின் viii ஆம் அத்தியாயத்தின் 3 பந்தியின் நியதிகளுக்கு புறம்பாக ரூபா 13,915,000 தொகை ஆண்டின் ஆரம்பத்தில் திட்டமிடப்பட்ட வருடாந்த பாதீட்டு நிதி ஏற்பாட்டிற்கு நிதிப்பிரமாணம் 66 இன் கீழ் ரூபா 1,400,000 தொகை வேறு நிதிஏற்பாடுகளிலிருந்து நிதிஏற்பாடு மாற்றப்பட்டு மேலதிக நேரம் மற்றும் விடுமுறை தினப் படிகள் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன | அவதானிப்பபை ஏற்றுக்கொள்வதாக | மதிப்பிடப்பட்ட நிதிஏற்பாட்டு எல்லையில் செலவினங்களை மேற்கொள்ளல் வேண்டும். |

## 2.3 கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரால் பின்வரும் விடயங்கள் தொடர்பாக சான்றுறுதிப்படுத்தல் செய்யப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நிதிக் கட்டுப்பாட்டிற்கு ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை தயாரித்துப் பேணப்படுவதாக கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டும். அம்முறைமையின் ஆக்கபூர்வம் தொடர்பாக அவ்வவ்போது மீளாய்வு செய்யப்பட்டு அதனை ஆக்கபூர்வமாக | எதிர் காலத்தில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுவதாக | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

வைத்திருப்பதற்குத் தேவையான மாற்றங்களை மேற்கொள்ள வேண்டும் ஆயினும், அம்மீளாய்வை எழுத்து மூலம் மேற்கொண்டு அதன் பிரதியை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் அவ்வாறான மீளாய்வு மேற்கொள்ளப்பட்டதற்கான கூற்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

**அவதானிப்புக்கள்**

| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு** | **இணங்காமை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) பாராளுமன்ற சட்டங்கள்<br>2003 இன் 22 ஆம் இலக்க விதை சட்டத்தின் 8(1) ஆம் பிரிவு | பதிவு செய்யப்படாத 38 நாற்று மேடையாளர்களால் ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்திற்கு நாற்றுக்கள் வழங்கப்பட்டிருந்தன. | சட்டத்தின் பிரகாரம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை<br>xii ஆம் அத்தியாயத்தின் 1.3 பிரிவு | 07 அலுவலகங்களுக்குரிய 41 உத்தியோகத்தர்கள் 101 நாட்கள் விடுமுறை அங்கீகரிக்கப்படாமல் சேவைக்கு அறிக்கையிடாத சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. | முறையாக விடுமுறைகளை அனுமதித்துக் கொள்ளுமாறு உத்தியோகத்தர்களுக்கு அறிவித்துள்ளதாக | தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் கோவை<br>---------------------------- | - | | |
| | நிதிப்பிரமாணம் 115 | 02 அலுவலகங்களுக்குரியதாக முன்னைய ஆண்டின் 300 கொடுப்பனவு உறுதிச்சீட்டுகளுக்காக நிதிப்பிரமாண கட்டளைகளுக்கு புறம்பாக 2020 ஆம் ஆண்டின் நிதிஏற்பாடுகளிலிருந்து கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணம் 115 இன் பிரகாரம் நடவடிக்கைகள் எடுப்பதற்கு தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ள தாக | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| (ஈ) | 2009 பெப்ரவரி 20 ஆந் திகதிய 1589/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்ட அரச சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட செயற்பாட்டு விதிக்கோவையின் xviii அத்தியாயத்தின் 193 ஆம் பந்தி | ஒரு அலுவலகமொன்றின் 07 உத்தியோகத்தர்கள் 07 ஆண்டுகள் முதல் 17 ஆண்டுகள் வரையான காலம் ஒரே சேவை நிலையத்தில் சேவை புரிவது தெரிவுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. | 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட உத்தியோகத்தர்க ளுக்கு இடமாற்றம் வழங்குவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக | செயற்பாட்டு விதிக்கோவையின விதிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2.5 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்
------------------------------------------------------------------

| **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| ------------------------------- | ------------- | -------------------- |
| செயற்திறன் மேம்படுத்தல் செயற்திட்டத்தின் கீழ் மிளகு, ஏலக்காய் போன்ற ஏற்றுமதி பயிர்செய்கை யாளருக்காக பயிரிடப்பட்ட நாற்றுக்களின் அளவு மற்றும் பயிர்செய்கை காணி பரப்பளவை அடிப்படையாக கொண்டு ஊக்குவிப்பு மானியம் வழங்கப்பட்டிருந்தது. 2020 ஆம் ஆண்டின் போது அவ்வாறு மானியக் கொடுப்பனவு தொடர்பாக தெரிவு பரிசோதனையின் போது ஒரு சந்தர்ப்பத்தில் ஏலக்காய் நாற்றுகளுக்காக ரூபா 26,250 தொகையும் 3 சந்தர்ப்பங்களில் மிளகு நாற்றுகளுக்காக ரூபா 206,040 ரொகையும் சுற்றறகிகை ஏற்பாடுகளுக்கு புறம்பாக கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. | இக்கொடுப்பனவு தொடர்பாக பரிசோதனைக் குழு நியமிக்கப்பட்டுள்ளதுடன் அக்குழுவின் பரிந்துரையின் பிரகாரம் எதிர்வரும் நடவடிக்கைகள் எடுப்பதாக | கொடுப்பனவு சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க வேண்டியதுடன் கூடுதலாக செலுத்தப்பட்ட பணத்த அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2.6 முற்பணங்களை வழங்குதலும் தீர்வு செய்தலும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) திணைக்களத்தில் சேவை புரிந்து சேவையை விட்டுச்சென்ற மூன்று ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 443,945 ஆன கடன் மீதியில் இருந்து ரூபா 232,965 தொகை 04 ஆண்டுகளாக அறவிடப்பட வேண்டியிருந்தது. | இரண்டு ஊழியர்களிடமிருந்து மேலும் அறவிடப்பட வேண்டிய ரூபா 377,095 தொகையை அறவிடுவதற்காக சட்டமா அதிபரின் ஆலோசனையின் பிரகாரம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் ஏனைய உத்தியோகத்தரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் மீதிகளை பிணையாளர்களிடமிருந்து அறவிடுவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படுவதாக | தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) இடமாற்றம் பெற்றுச் சென்ற இரண்டு ஊழியர் களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 234,820 ஆன கடன் மீதி ஓராண்டிற்கு பழையதாக இருந்தது. | கடன் தொகையை செலுத்துமாறு உத்தியோகத்தர்களுக்கு அறிவித்துள்ளதாக | வழங்கப்பட்ட கடன்களை தாமதமின்றி அறவிட்டுக் கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாடுகளை நிறைவேற்றாமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 மார்ச் 01 ஆந் திகதிய 3/2020/iv ஆம் இலக்க ஏற்றுமதி விவசாயத் திணைக்கள சுற்றறிக்கையின் 1.4.8 ஆம் பந்தியின் பிரகாரம் ஏற்றுமதி பயிர் | வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| செய்கை மேம்படுத்தல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் முதலீட்டு உதவிகள் வழங்குவதற்காக தெரிவு செய்யப்பட்ட ஒவ்வொரு நலனாலிக்கும் ஏற்றுமதி பயிர் செய்கை விளைச்சலை அதிகரிப்பது தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித் திட்டமொன்றுக்கு தொடர்புபடுத்த நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும் சில நலனாலிகள் தொடர்பாக அத்தேவைப்பாடு நிறைவேற்றப் பட்டிருக்கவில்லை. | எடுக்குமாறு அனைத்து பணிப்பாளர்களுக்கும் அறிவித்துள்ளதாக | |

## 3.2 செயற்திட்டத்தை நிறைவேற்றுவதில் தாமதம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 1,448,138 பெறுமதியான முல்ஹல்கலே மற்றும் மித்திதெனிய நாற்றுமேடைகளில் நுண்பாக நீர் வழங்கல் செயற்திட்டம் 2019 திசெம்பர் 20 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட்டு கையளிக்கப்பட வேண்டிய போதிலும் 08 மாத காலதாமதத்தின் பின்னர் 2020 ஆகஸ்ட் மாதம் வேலை பூர்த்திசெய்யப்டு ஒப்படைக்கப்பட்டிருந்தது | அவதானிப்பினை ஏற்றுக்கொள்வதாக | உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதியில் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.3 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களுடன் வருடாந்த செயலாற்றல் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | கணக்காய்வு சட்டத்தின் பிரகாரமும் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.4 உள்நாட்டு நிதியங்களிலிருந்து செயற்படுத்தப்பட்ட செயற்திட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இரண்டு நுண்பாக நீர் வழங்கல் முறைமைகள் ரூபா 1,448,138 தொகை செலவு செய்யப்பட்டு நிர்மாணிக்கப் பட்டிருந்தது. அப்பெறுகைக்கு உரிய ஒப்பந்தக்காரர்களுடன் மேற்கொள்ளப்பட்ட உடன் படிக்கையின் 5 ஆம் பிரிவின் பிரகாரம் ஒப்பந்தத்தை பூர்த்தி செய்த திகதி முதல் ஓராண்டு காலம் ஒப்பந்தக்காரரால் பராமரிக்கப்பட வேண்டிய போதிலும் பராமரிப்புக் காலத்தில் இறுதி பட்டியலில் 10 சதவீதம் நிறுத்தி வைக்க வேண்டும். எனினும் அத்தேவைப்பாடு கருத்திற் கொள்ளாமல் 2020 ஆகஸ்ட் மாதம் முழுமையான பட்டியல்களின் பெறுமதி கொடுப்பனவு செய்யப்பட்டிருந்து. | 2021 ஆகஸ்ட் 26 ஆந் திகதி வரை ஏதேனும் பிழையொன்று ஏற்பட்டால் உடன்படிக்கையின் பிரகாரம் தேவையான நடவடிக்கைளை எடுப்பதாக 2021 பெப்ரவரி 22 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் குறித்த கம்பனி இணங்கியிருந்தது. | பராமரிப்புக் காலத்தில் நிதிசார் கடப்பாடொன்று வைக்கப்பட வேண்டும். |

## 3.5 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 நவம்பர் மாதம் ஒன்று ரூபா 34,191 வீதம் 200 உம் 2020 ஆகஸ்ட் மாதம் ஒன்று ரூபா 38,088 வீதம் 100 உமாக ரூபா 10,647,000 செலவிடப்பட்டு 300 டெப்லட் கணனிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. | - | - |
| (i) | அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2 வழிகாட்டியின் பிரகாரம் நிறுவகத்தினால் 3 ஆண்டுகள் எதிர்பார்த்த பெறுகைகள் உள்ளடக்கப்பட்ட பிரதான பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | சரியான பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும் | அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 5.4.10 வழிகாட்டியின் பிரகாரம் செயலாற்றல் பிணைப் பொறுப்பொன்று பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.<br>அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 8.9.1 வழிகாட்டியின் பிரகாரம் வழங்குனருடன் உடன்படிக்கையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்பினை ஏற்றுக்கொள்வதாக | பெறுகை வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும். |
| (iii) | முன்னைய ஆண்டிலும் மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட 300 டெப்லட் கணனிகளில் ரூபா 4,996,809 பெறுமதியான 136 டெப் கணனிகள் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் 2020 திசெம்பர் 15 ஆந் திகதி வரையிலும் களஞ்சியப்படுத்தியிருந்தன. | 2021 ஆம் ஆண்டின் போது டெப் கணனிகளை பகிரந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | அரசின் பணத்தை செயற்திறனாக பயன்படுத்து வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்**

------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நாரம்மல அனைத்து பயிர் மற்றும் வெற்றிலை ஆராய்ச்சி நிலையத்தின் தாவர விஞ்ஞான மற்றும் மண் போசணைப் பிரிவுவில் மரங்கள் மற்றும் மண் தெரிவு பரிசோதனைக்காக 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 840,650 செலவிடப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்த டெல்தால் பிரித்தெடுக்கும் இயந்திரம் (Kjeldahl Distillation unit) Digestion unit என்ற பயன்படுத்தப்படுகின்ற இயந்திரம் இல்லாமை காரணமாக குறைப்பயன்பாட்டுடன் காணப்பட்டது. | 2021 ஆம் ஆண்டில் தேவையான நிதி ஏற்பாடு பெற்றுக் கொள்ளப்பட்டு இயந்திரத்தை செயற்படுத்துவதற்கு திட்டமிடப் பட்டுள்ளதாக | சொத்துக்கள் ஆக்கபூர்வமாக பயன்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | அனைத்து விரிவாக்கல் உத்தியோகத்தர் வீடுகளும் தற்போது பாவனைக்கு எடுக்க முடியாத நிலைமையில் காணப்பட்டது. | உத்தியோகபூர்வ வீடுகள் தொடர்பாக இறுதி தீர்மானமொன்றை எடுப்பதற்காக பதுளை பிரதேச செயலகத்திடமிருந்து அறிக்கையொன்றை வழங்குமாறு அறிவித்துள்ளதாக | ஆக்கபூர்வமாக பயன்படுத்தப்பட வேண்டும். |
| (இ) | சிகாஸ் மென்பொருள் கைவிரலடையால இயந்திர மென்பொருட்கள் மற்றும் அலுவலக தரவுகள் கணனி மூலம் மேற்கொள்ளும் போது, மின்சாரம் தடைப்படும் போதும் அதிகளவில் மின்சாரம் வருகின்ற போதும் அம்மென்பொருட்களை கொண்ட கணனிகளுக்கு சேதம் ஏற்பக்கூடிய ஆபத்தொன்று காணப்படுவது காரணமாக கொள்வனவு செய்யப்பட்ட 30 யூபீஎஸ் 2020 யூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் களஞ்சியத்திற்கு கிடைத்திந்த போதும் அதில் ரூபா 69,700 பெறுமதியான 17 யூபீஎஸ் 2021 பெப்ரவரி 11 ஆந் திகதி வரை அதாவது 6 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் எவ்வித பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாமல் திணைக்கள களஞ்சியத்தில் விளைவற்ற வகையில் வைக்கப்பட்டிருந்தன. | கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சொத்துக்களிலிருந்து ஆகக் கூடிய பயனைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். |

### 3.7 நட்டம் மற்றும் இழப்புக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கடந்த ஆண்டுகளில் இடம்பெற்றிருந்த 5 நட்ட சம்பவங்களுக்குரிய ரூபா 74,455 பெறுமதி 2020 ஆம் ஆண்டில் புத்தகங்களிலிருந்து பதிவழிக்கப்பட்டிருந்ததுடன் 4 சம்பவங்களுக்குரிய ரூபா 4,076,808 ஆன நட்டமொன்று மேலும் அறவிடுவதற்கு அல்லது பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.8 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| பயிர்ச்செய்கையாளர்களுக்கு அறிவினை வழங்கும் நோக்கத்துடன் அச்சிடப்பட்டு 2018 யூன் மாதம் களஞ்சியத்திற்கு கிடைத்திருந்த ரூபா 579,341 கிரயமான 13,333 தொழில்நுட்ப பிரசுரங்கள் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி அளவிலும் களஞ்சியத்தில் எஞ்சியிருந்தன. இப்புத்தகங்கள் 2 ½ ஆண்டுகள் அளவிலான காலம் களஞ்சியத்தில் காணப்பட்ட இதற்காக செலவிடப்பட்ட செலவினம் பயனற்ற செலவினமாக இருந்தது. | இதன் பின்னர் வருடாந்த தேவைப்பாட்டைக் கருத்திற் கொண்டு அரசின் பணத்தை செயற்திறனான வகையில் பயன்படுத்துமாறு குறித்த உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | தேவைப்பாட்டினைக் கருத்திற் கொண்டு பிரசுரங்களை அச்சிடுவதற்கு திட்டமிடப்பட வேண்டும். |

### 3.9 முகாமைத்துவ நலிவுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2020 மார்ச் 01 ஆந் திகதிய 3/2020/iv ஆம் இலக்க ஏற்றுமதி விவசாயத் திணைக்கள சுற்றறிக்கையின் 1.2.2 ஆம் பந்தியின் பிரகாரம் முதலீட்டு உதவியை பெற்றுக் கொள்வதற்காக காணியின் உரித்தினை உறுதிப்படுத்தாத நான்கு விண்ணப்பதாரிகளுக்காக ரூபா 493,000 கொடுப்பனவு செய்திருந்தமை தெரிவுப் பரிசோதனையின் போது கண்டறியப்பட்டது. | முதலீட்டு மானியங்களை கோரும் அனைத்து விண்ணப்பதாரிகளின் உரித்தினை உறுதிப்படுத்தும் ஆவணங்களை பெற்றுக் கொள்வதற்கும் சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்குமாறும் மாவட்ட உதவிப் பணிப்பாளர்கள் தெரியப்படுத்தப்பட்டுள்ளனர். | திணைக்கள சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) திணைக்களம் நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் ஆண்டு 2030 ‘‘நிகழ்ச்சி நிரல்’’ தொடர்பாக அறிந்திருந்த போதும் அதன் செயற்பாடுகள் தொடர்பாக நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் அந்த இலக்குகளை நோக்கி அடைந்து கொள்வதற்கு அளவுகோள் களையும் இலக்கை மதிப்பிடுவதற்காக குறிகாட்டிகளை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | தற்போது பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் கீழ் நிலைபேறான இலக்குகள் இனங்காணப்பட்டு வருவதாக | நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஆண்டு 2030 ‘‘நிகழ்ச்சி நிரல்’’ தொடர்பாக அறிவூட்டுதல் மற்றும் தெரியப்படுத்துதல் தொடர்பில் கவனம் செலுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அமுல்படுத்துதல் தொடர்பாக திணைக்களத்தின் பணிப் பொறுப்புக்கள் தொடர்பாக ஆர்வத்தை காண்பிக்கின்ற தரப்பினர் நிறுவனத்தினால் இனங்காண முடீயமாக இருந்த போதிலும் நிறுவனத்தினால் இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்காததன் காரணமாக நிறுவனத்திற்குரிய இலக்குகளை தயாரிக்கும் போது, பங்குபற்றுபவர் களுக்கான அணுகுமுறை தெளிவுபடுத்தப்பட்டிருக்க வில்லை. | 2021 ஆம் ஆண்டின் போது நிலைபேறான இலக்குகளை இனங் காண்பதற்காக நிகழ்ச்சிகளை நடாத்த திட்டமிடப்பட்டுள்ளதாக | தரப்பினர்கள் இனங்காணப்பட்டுள் ளதாக அறிவிக்கப்பட்டுள்ள து. |
| (இ) | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களுக்காக சரியான செயலாற்றல் தரவு அடிப்படையொன்றை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டின் போது செயலாற்றல் தரவு அடிப்படையொன்றை தயாரிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுப்பதாக | - மேற்படி - |

## 5. மனித வள முகாமைத்துவம்

---------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | ------------------------------------------------ | -------------- | --------------- |
| (அ) | சிரேஷ்ட மட்டத்தில் காணப்பட்ட 20 வெற்றிடங்களில் 15 இலங்கை விஞ்ஞான சேவைக்குரிய உதவிப் பணிப்பாளர் பதவிகளாக இருந்ததுடன் மாவட்ட விடய செயற்திட்ட உத்தியோகத்தர் பதவிகளில் 15 வெற்றிடங்கள் காணப்பட்டன. அது திணைக்களத்தின் செயற்பாடுகள் தொடர்பாக பாதகமாக தாக்கமளித்திருந்தன. | எதிர்காலத்தில் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் வெற்றிடங்களை பூர்த்தி செய்வதற்கும் அதவுரை உள்ள பதவியணியினர் மூலம் நோக்கங்களை நோக்கி அடைவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி உதவியாளர் பதவிகள் 84 அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் அப்பதவிகளுக்காக எந்தவொரு உத்தியோகத்தரும் ஆட்சேர்ப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் ஆட்சேர்ப்பு நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டு ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பதற்காக திட்டமிடப்பட்டுள்ளதாக | - மேற்படி - |